# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATTUR.**

**M.C. No.15 /2024.**

1. Deposition of Witness for : PW1(LW1)
2. Name : KALPANA
3. Father's Name :
4. Village :
5. Taluk :
6. Caste :
7. Calling :
8. Religion :
9. Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14**.10.2024.**

எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:—

1. என் கணவர் எனக்கு மாமா முறை வேண்டும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் இருவரும் காதலித்து தான் திருமணம் செய்து கொண்டீர்கள் என்று சொன்னால் சரிதான். நாங்கள் இருவரும் புரிந்து கொண்டு தாய் மாமன் என்ற முறையில் திருமணம் செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். நான் பி.எஸ்.சி இயற்பியல் படித்துள்ளேன். 20.01.2016—ம் தேதியன்று திருமணம் நடைபெற்றதா என்றால் சரிதான். திருமணம் நடைபெற்ற பிறகு நீங்கள் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தீர்களா என்றால் சரிதான். நீங்கள் அவருடன் நல்லபடியாக வாழ்ந்து வந்த சமயத்தில் உங்களுக்கு 2

குழந்தைகள் பிறந்தது என்றால் சரிதான். உங்களுக்கு திருமணம் நடைபெற்ற பிறகும், 2 குழந்தைகள் பிறந்த பின்பும் உங்களை நன்றாக பார்த்து வந்துள்ளார் என்றால் சரிதான். உங்களையும் குழந்தையும் பராமரிப்பதற்காக எதிர் மனுதாரர் மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு சென்றார் என்றால் சரிதான். சிங்கப்பூரில் அவர் ஒரு மாதமும் மலேசியாவில் 5 அல்லது 6 மாதங்கள் இருந்தார்.

2. அவர் வெளிநாட்டிற்கு சென்ற சமயத்தில் நீங்கள் அவர் வீட்டில் வாழ்ந்து வந்தீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு வாழ்ந்து வந்த சமயத்தில் அவரது தாயார் உங்களை நன்றாக பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அப்போது எதிர் மனுதாரர் அவருடைய செலவில் தான் குழந்தைகளை படிக்க வைத்தார் என்று சொன்னால் சரிதான். இன்றைய வரையில் எதிர் மனுதாரர் கட்டிய தாலி மற்றும் மெட்டி நீங்கள் போட்டு கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் எதிர் மனுதாரர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் திருப்பத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அவர்கள் அழைத்து பேசி எங்களை சேர்ந்து வாழ அறிவுறுத்தினார்கள்.

3. போலீசார் விசாரணையின்போது எதிர் மனுதாரரின் பராமரிப்பில் தான் குழந்தைகள் இருந்தது என்றால் சரிதான். நான் பிரிந்து வந்த பிறகு எதிர் மனுதாரர் சுமார் ஒரு வருடங்களாக குழந்தைகளை பராமரித்து வந்தார். அவர் குழந்தைகளை பராமரித்து வந்தபோது குழந்தை வேண்டும் என்று போலீசாரிடம் புகாரோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு, பஞ்சாயத்தோ நடைபெற்றதா என்றால் இல்லை. நீங்கள் தற்போது state Bank–ல் தற்காலிக ஊழியராக பணியாற்றி வருகிறீர்களா என்றால் இல்லை. ஆறு மாதங்களுக்கு முன்பாக பணியாற்றி வந்தேன். நீங்கள் தற்போதும் state Bank –ல் தற்காலிக ஊழியராக பணியாற்றி வருகிறீர்கள் என்றால் இல்லை.

4. உங்கள் தந்தையார் சொந்தமாக கார் Travels வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். அதன் மூலமாக அவர் காரை வாடகை விட்டு வருமானம் ஈட்டுகிறார் என்றால் ஆமாம். உங்கள் தாயார் அவர்கள் அரசாங்க ஊழியர் என்றால் இல்லை. என்னுடைய சித்தி தான் அரசாங்க ஊழியர் ஆவார். உங்களுடைய சித்தி பராமரிப்பில் தான் இருந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் உங்கள் தந்தையார், சித்தி ஒன்றாக வசித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். இப்போதும் தனியார் பள்ளியில் தான் எதிர் மனுதாரரின் குழந்தைகளை சேர்த்துள்ளார்களா என்றால் நான் சேர்த்துள்ளேன். மேற்படி குழந்தைகளை பராமரிப்பது உங்கள் சித்தி என்று சொன்னால் எல்லாரும் சேர்ந்து தான் செய்வோம்.

5. ஆகையால் எவ்வித கஷ்டமும் இல்லை என்றும் என் சித்தியுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. உங்கள் கணவரை விட்டுவிட்டு நீங்கள் அப்பாவுடன் சந்தோஷமாக வாழ்ந்துவருகிறேன் என்றால் சரிதான். ஆனால் ஒவ்வொரு விஷயத்திற்கும் நான் அவர்களை தான் எதிர்பார்த்து வருகிறேன். ஒவ்வொரு விஷயத்திற்கும் அவர்கள் பெரியவர்கள் என்ற முறையில் அவர்களை கேட்டு செய்கிறேன் என்று சொன்னால் அவர்கள் வேண்டாம் என்று சொல்லும் விஷயத்திற்கும் நான் அவர்களை கேட்டு செய்து வருகிறேன். உங்கள் அப்பாவும் சித்தியும் நீங்கள் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று சொன்னால் முன்பு நினைத்தார்கள் இப்போது இல்லை.

6. இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தற்போது அவர்கள் வேண்டாம் என்று கூறுகிறார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு வந்து 12.05.2024, 21.06.2024, 14.07.2024 அன்று உங்கள் தந்தையார் எதிர் மனுதாரர் சார்பாக தென்மலை, ஜெயந்தி, சாந்தா ஆகியோர் பஞ்சாயத்து செய்தார்களா என்றால் ஆமாம் பஞ்சாயத்து செய்தார்கள். அந்த மூன்று முறையும் பஞ்சாயத்து பேசும்போது உங்கள் தாய் தந்தையர் சேர்ந்து வாழ

விருப்பம் தெரிவித்தார்கள் என்று சொன்னால் நான் விருப்பப்பட்டால் செல்லலாம் என்று கூறினார்கள். நீங்கள் காதலித்து திருமணம் செய்த பிறகு 2 குழந்தைகளை பெற்றெடுத்த பிறகு நீங்கள் ஏன் பிரிந்தீர்கள் என்று சொன்னால் கடந்த ஒரு வருடமாக அவர் என்னை அடித்து வருகிறார்.

7. அவர் அடித்தது சம்பந்தமாக நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டீர்களா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீங்கள் எதிர் மனுதாரர் அடித்ததாக கூறுவதும் மற்றும் அவர் மீது புகார் கொடுத்துள்ளீர்கள் என்று கூறும் விதம் தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் அது சம்பந்தமாக ஆதாரத்தை கொடுத்துள்ளேன். நீங்கள் எந்தவித முகாந்திரம் இல்லாமல் வழக்கு தொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இன்றைய தேதியில் எதிர் மனுதாரர் அவர்கள் உங்களை தனிக்குடித்தனம் வைத்து வாழ தயாராக இருக்கிறார் என்று சொன்னால் நீங்கள் செல்வீர்களா என்றால் நான் செல்ல விருப்பமில்லை.

8. ஒரு வருட காலம் நீங்களும் உங்கள் குழந்தையும் பிரிந்திருந்த சமயத்தில் எதிர்மனுதாரரிடம் இருந்த குழந்தையை சென்று பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. அப்போது எதிர் மனுதாரர் அவர்கள் குழந்தையை உண்மையாக பராமரித்து பாசத்துடன் வளர்த்து வந்தார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தான் குழந்தைகளை உங்களிடம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். உங்கள் மீதுள்ள பாசத்தால் சேர்ந்து வாழ வேண்டும் என்ற விருப்பத்தால் உங்களிடம் குழந்தையை எதிர் மனுதாரர் விட்டார்கள் என்று சொன்னால் அவர் வாசலில் விட்டு சென்றுவிட்டார். அவ்வாறு அவர் குழந்தையை விட்டு சென்றபிறகு நீங்கள் அவரிடம் பேசினீர்களா என்று சொன்னால் நான் அவரிடம் செல்ல விருப்பமில்லை.

9. எதிர் மனுதாரர் அவர்கள் யு–டியூப் சேனல் நடத்துகிறார் என்று சொன்னீர்கள் அதற்கான ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அந்த யு–டியூப் மூலமாக வரும் வருமானத்திற்கான ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எந்த செல்போன் எண் மூலமாக அவர் யு–டியூப் நடத்துகிறார் என்று சொன்னால் இல்லை. எதிர் மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். அவர் எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளை நீங்கள் குறிப்பாக மறுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்களும் ஜாபரும் கல்லூரியில் ஒன்றாக படித்தீர்களா என்றால் அவர் யாரென்று எனக்கு தெரியாது. நீங்களும் உங்கள் கணவரும் அலைபேசியில் பேசியுள்ளோம்.

10. உங்களுடைய அலைபேசி எண் 9363654884 என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் வெளிநாட்டிற்கு சென்று 6 மாதத்தில் திரும்பி வர அவசியம் என்னவென்றால் வேலை கடினமாக இருந்ததால் அவர் திரும்பி வந்துவிட்டார். அவர் வேலை கடினமாக இருந்ததால் திரும்பி வரவில்லை என்றும் நீங்கள் அவரை கட்டாயப்படுத்தி வர வைத்துவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. திரு.ஜபார் அவர்கள் State Bank எதிரில் கத்தோலிக் வங்கியில் அவர் வேலை செய்து வருகிறார் என்று சொன்னால் அதை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அவருடைய அலைபேசியில் இருந்து உங்களை அவர் தொடர்பு கொண்டு அவர் பேசியுள்ளார் என்று சொன்னால் அதை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. 19.01.2022 அன்று ஜாபரின் நண்பருடன் தென்றல் ராஜ் என்பவருடன் தொடர்பு ஏற்பட்டு நீங்கள் அவரின் வீட்டில் இருந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

Sd/-J.Omprakash

Chief Judicial Magistrate,
Tirupathur.